IndiaFirst LIFE INSURANCE

**Publication: Dinamani** **Date: Sunday, 23rd November, 2014**

**Edition: Bangalore**

# ஆக்கப்பூர்வ திட்டங்கள்: மாணவர்களிடம் யோசனைகளை வரவேற்கிறது இந்தியா ஃபர்ஸ்ட் காப்பீடு நிறுவனம்

***சென்னை, நவ. 22:*** ஆக்கப்பூர்வமான புதிய திட்டங்களை உருவாக்குவது தொடர்பான யோசனைகளைப் பள்ளி மாணவர்களிடமிருந்து வரவேற்பதாக இந்தியா ஃபர்ஸ்ட் காப்பீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ள விவரம்: 'மகிழ்ச்சியான இந்தியாவை' உருவாக்கும் நோக்குடன் இந்தியா ஃபர்ஸ்ட் காப்பீடு நிறுவனம், பள்ளி மாணவர்களிடமிருந்து புதிய திட்டங்களுக்கான யோசனைகளை வரவேற்கிறது.

இதன் கீழ் பெறப்படும் 25 சிறந்த யோசனைகளுக்குத் தலா ரூ. 50,000 வீதம் உதவித் தொகை வழங்கப்படும். உதவித் தொகை பெறும் மாணவர், அதனைக் கொண்டு தனது யோசனைக்குச் செயல் வடிவம் தர வேண்டும்.

டிசம்பர் மாதம் 8-ஆம் தேதிக்குள் மாணவர்கள் தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். டிசம்பர் 10-ஆம் தேதிக்குள் யோசனைகளை அளிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த யோசனைகளுக்கு உதவித் தொகை அளித்ததும், 40 நாள்களில் அந்த யோசனையைச் செயல்படுத்த வேண்டும். பிப்ரவரி 7-ஆம் தேதி நடைபெறும் தேசிய அளவிலான மாநாட்டின்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து யோசனைகளும் வெளியிடப்படும். 500 பள்ளிகளிலிருந்து 20,000 மாணவர்கள் இதில் கலந்து கொள்வரென எதிர்பார்ப்பதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்கொண்டு விவரங்களை www.happyindia.indiafirstlife.com எனும் இணையதளத்தில் பெறலாம்.

மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இந்தியா ஃபர்ஸ்ட் காப்பீடு நிறுவனமானது, பாங்க் ஆஃப் பரோடா (44%), ஆந்திர வங்கி (30%), பிரிட்டனின் முதலீட்டு நிறுவனமான லீகல் & ஜெனரல் (26%) ஆகியவற்றின் கூட்டு நிறுவனமாகும்.

A Joint Venture of
Bank of Baroda Legal & General Andhra Bank